# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.67/2018

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் செவ்வாய்கிழமை நீதிமன்ற தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**C.W.1 ஜெகதீசன், வயது 38, த/பெ நடராஜன்**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 6 மற்றும் 7 தரப்பு)**

தாவா இடத்தில் சர்வே ஸ்டோன் பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆணையர் ஆவணத்தை பார்த்து வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்று பதில் அளிக்கிறார். தாவா இடத்தில் பார்வையிட்டு விசாரிக்க அனுமதி அளிக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.367/1C A ரிஜிஸ்டர் யார் பெயரில் உள்ளது என்றால் ஆணையர் ஆவணத்தை பார்த்து விட்டு சரவணன் பெயரில் உள்ளது. அதேபோல் சர்வே எண்.367/1C பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ஆணையர் ஆவணத்தை பார்த்து விட்டு ராஜகோபால் மகன் சரவணன் என்பவர் பெயரில் உள்ளது என்று பதில் அளிக்கிறார்.

2. சர்வே எண்.367/1B வரைபடத்தில் இளமாறன் என்பவர் அனுபவித்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் பயிர் வைக்கப்பட்டிருந்ததா என்றால் 7 தென்னை மர கன்றுகள் நடப்பட்டிருந்தன. அதைப்பற்றி நான் வரைபடத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அறிக்கையில் சொல்லியுள்ளேன். சர்வே எண்.367/1C வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 4 பகுதிகளில் பயிர்கள் வைக்கப்பட்டிருந்ததா என்றால் நான் சென்று பார்வையிடும் போது இல்லை. சர்வே எண்.367/1C வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 4 பகுதிகளாக காட்டியுள்ளது மேற்படி சர்வே எண்.367/1B யோடு சேர்ந்துள்ளதா என்றால் 367/1B யோடு சேர்ந்துள்ளது என்று ஆணையர் பதில் அளித்தார்.

3. மேற்படி சர்வே எண்.367/1B மற்றும் சர்வே எண்.367/1C வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒரே பகுதியாக உள்ளதா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சர்வே எண்.367/1C முழுவதும் வாதி ஆறுமுகம் அனுபவத்தில் உள்ளது என்றாலும் அது மொத்த பரப்பு 24.5 ஏர்ஸ் என்றாலும் தற்போது 0.23.5 ஏர்ஸ் உள்ளது என்றாலும் சரிதான். மேற்படி

விவரங்களை நான்  நில அளவையர் சொன்னதை வைத்துதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா இடத்தில் சர்வே ஸ்டோன் இல்லை என்றாலும், நான் சரியாக அளக்கவில்லை என்றாலும் நில அளவையர் சொன்ன விவரங்களை வைத்துதான் மேற்படி அறிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேன்.

**மறு விசாரணை**

நில அளவையர் அளந்து பார்த்து சொன்ன விவரங்களை வைத்து அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை - இல்லை**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.